1 வெல்லும் தூயதமிழ், 2044,விடை (2013,மே)



*வெல்லும் தூயதமிழின் பணி பெரிதும் போற்றத் தக்கது.*

புதுச்சேரியிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'வெல்லும் தூயதமிழ்' மாத இதழ் 20 ஆண்டுகளை முடித்து 21ஆம்ஆண்டில் அடியெடுத்து வைப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது.

சிறுகதை,கவிதை,கட்டுரை போன்றவைகளைப் பிறமொழிச் சொற்கள் கலக்காமல் தூயதமிழ் நடையில் தருவது மட்டுமல்லாமல், பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிமுகப்படுத்தி, புழக்கத்திற்குக் கொண்டுவரும் முயற்சியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இந்த இதழின் பணி பெரிதும் போற்றத்தக்கது.

'வெல்லும் தூயதமிழ்' மாத இதழின் சிறப்பாசிரியர் முனைவர் க.தமிழமல்லன் அவர்களின் தமிழ்த்தொண்டு மேன்மேலும் சிறப்புற்று விளங்கவும், தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்க்கும் வகையில் இந்த மாத இதழின் பணி வரும் ஆண்டுகளில் சிறப்புற்று அமையவும் உளமார வாழ்த்துகிறேன்.

(ந.அரங்கசாமி)

3.5.2013 ஒப்பம்

நல்லதை ஏற்போம் ! அல்லதை எதிர்ப்போம் !

# வெல்லும் தூயதமிழ்

2044, விடை,(வைகாசி),சூன், 2013 வெற்றி: 20 : தமிழ் :12 உரு.10

## கவலைப்பட வேண்டும்

தமிழ்நாட்டில் சேரசோழபாண்டியர்களின் போர்கள் ஓயாமல் நிகழ்ந்துகொண்டே இருந்தன என்பது வரலாறு. அப்போர் பகையைப் பழி தீர்க்கப் பயன்பட்டதில்லை. தங்களுக்குள் போரிட்டு மடிவது தங்கள் உடைமைகளைப் பாழாக்கிக் கொள்வது பகையை வளர்த்துக் கொள்வது என்னும் போக்கிலேயே அவை நிகழ்ந்தன. அந்தப்போக்கு மீண்டும் திரும்புகிறது.

தோழமையோடு செயற்பட்ட பா.ம.க, வி.சி இரண்டும் இப்போது பகைமை கொண்டு விட்டன. நெருப்பு அவர்களுக்குத் துணையாகிவிட்டது. இருபக்கங்களிலும் பேரிழப்புத் தொடர்கதையாகி விட்டது.

'தமிழ்ப்பாதுகாப்பு இயக்கம்' என்னும் அமைப்பை உருவாக்கிய அவர்கள் தமிழ்மொழி நலத்துக்காக ஒற்றுமையு டன் செயற்பட்டார்கள். அப்போது உலகத் தமிழ்இனமே மகிழ்ந்தது.

இலங்கைத் தமிழர்க்கு ஈரியக்கங்களின் தலைவர்க ளும் சேர்ந்து மேற்கொண்ட பணிகள் அவர்களை நம்பிக்கை தரும் பச்சைத் தமிழர்களாகக் காட்டியன.

தமிழ்நிலத்தில் உண்மையான மாறுதல்கள் விளையும் என்னும் எதிர்பார்ப்பு அரும்பியது.

மக்கள் தொ.கா வால் மருத்துவர் தமிழ் வளர்ப்பதும் தனித்தமிழ்ப் பெயர்களால் எழுச்சித் தமிழர் தமிழ்ப்பணி செய்வ தும் உலகத்தமிழர்களால் வரவேற்கப்பட்டன. ஆனால்,இன்று ஒருவரையொருவர்பகைத்துக் கொள்வதைப்பார்த்தால் தமிழினத் துக்குக் கிடைக்கவேண்டிய நலம் குலைந்துவிடுமோ என்று அஞ்சிக் கவலைப்பட வேண்டி யிருக்கிறது. கோவூர் கிழார் போன்ற சான்றோர்கள் தமிழர்க்குள் விளைந்துள்ள பகையை நீக்க முன்வருவார்களா?

## புதுச்சேரியில் மின்கட்டணம் உயர்ந்துவிட்டது

அரசுபொதுமக்களுக்குத் துன்பத்தைத் தரத் தயங்கவில்லை.

மதிப்புக்கூட்டுவரியை மிகஅதிகஅளவில் உயர்த்திய அரசுஇரண்டு முறை மின் கட்டணத்தை உயர்த்தி யதை மக்கள் விரும்ப வில்லை.

ஓர் அரசு மக்களுக்கு ஏற் படும் துன்பங்களை நீக்க வேண்டும்.முன்பே மின் இணைப்புப் பெறுவது மின் மானிகளைமாற்றுவதுபோன்ற செயற்பாடுகளில் சொல்ல முடியாத தொல்லைகள் பட்டு வருகிறார்கள். அதி காரிகளும் அமைச்சர் களும் இருப்பது அத்துன்பங் களை நீக்குவதற்குத்தான் என்பதை மறந்து விடுகிறார் கள். மேலும் மேலும் அவர்கள் இன்ப வாழ்க்கையை அர சின் செலவில் தேடிக் கொள்கிறார்கள். ஆனால் மக்களுக்கு நன்மை செய் வதை எண்ணிப் பார்க் கிறார்களா?

அறிவிக்கப் படாத மின்தடையைப் பொது மக்க ளுக்குப் பரிசாய் அளிக்கி றார் கள். இத்தீமை என்று தீரும்?

## நடுவண் தேர்வுக்குழு (சென்டாக்)மாணவர் களுக்குப் படிப்புக் கட்டணத் தை அரசு செலுத்தி வருதல் சரியா?

பணப்பற்றாக்குறை நிலவி வரும் இக்காலத்தில் மருத்துவம் பொறியியல் மாணவர் களுக் குரிய படிப்புக் கட்ட ணத்தை அரசே செலுத்தி வருகிறது. இத்திட்டம் சரியா?

இன்றைய நிலையில் அந்த மாணவர்களுக்கு அளிக்க வேண்டிய நிலுவைத் தொகையே உருவா 48கோடி இருக்கிறது.

இந்தப்படிப்புப் படிக்கும் மாணவர்கள் அவர் களின் பெற்றோர் படிப்புக் கட்டணம் செலுத்த இயலாத ஏழைகளா?

இல்லையே? அப்படியாராவது இருந்தால் அவர்களுக்கு அரசு



உதவித்தொகை தருவதில் பிழை யில்லை.

ஆனால்,அரசில் பணியாற்றும் உயர்அலுவலர்கள்,மருத்துவர்களின் பிள்ளைகள்,பெருஞ்செல்வர்களின் பிள்ளைகள் இவர்களெல்லாம் படிப்புக் கட்டணம் கட்ட இயலாதவர்களா?

இவர்களுக்குஅரசுபடிப்புக் கட்டணம்செலுத்துவது சரியா? இச்சலுகையில் படிக்கும் மாண வர்கள் படிப்பு முடிந்ததும் புதுச்சேரியில் பணி செய்ய வேண்டும் என்று ஒப்பந் தம் செய்யப் பட்டுள்ளதா? அல் லது இலவயப் படிப்பளித்த புதுச் சேரியில்இலவயமாக மருத்துவப் பணி செய்ய வேண்டும் என்ற ஒப்பந்தம் இருக்கிறதா? இல்லையே?

இலவயப்படிப்புப் பெறும்மாணவர்கள்அதற்கு மதிப்பளிக் கிறார் களா?

முதலாண்டில் பெரும்பான்மையான மாணவர்கள் தேர்வில் தோல்வி யடைகிறார்கள். அடுத்த ஆண்டுகளிலும் அவர்கள் வெற்றி பெறுவதில்கவனம்செலுத்து கிறார்களா?இல் லையே? மருத்துவம் பொறியியல் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் திறமையாகக் கற்பிக்கிறார் களா?அவர்களின் பணி களை மதிப்பிடும் ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா? இனியும் பொது மக்களின் வரிப்பணத்தை மேட்டுக்குடிமக்களுக்குச் செலவழிப்பதைப்பொறுத்துக் கொள்ளுதல் இயலாது. உடனடியாக அரசு அத்தொகை அளிப்பதை நிறுத்த வேண்டும். உண்மை யிலேயே பணம் செலுத்த இயலாதவர் களுக்கு அரசு இலவயக் கல்வி தரட்டும். அவர்களும் இயலும் நிலைக்கு வந்து விட்டால் நிறுத்துவது நல்லது.



1.இலங்கையை நட்பு நாடு என்று சொல்லக்கூடாது.
2.இலங்கை மீது பொருளியல் தடை ஏற்படுத்த வேண்டும்.
3.போர்க்குற்றங்களை நிகழ்த்தியவர்களைப் போர்க்குற்றவாளிகள் என்று அறிவிக்குமாறு உநாஒ (ஐநா)வை இந்தியா வலியுறுத்த வேண்டும்
என்று த.நா. சட்டமன்றத்தில் அரசு முடிவை இயற்றியது. மிகமிகப்பாராட்டத்தக்கது.
தமிழ் ஈழம் குறித்து அனைத்து வகையான இலங்கைத் தமிழர்களிடமும் பொதுக் கருத்துக்கணிப்பு(வாக்கெடுப்பு) நடத்தவேண்டும்.
என்னும் தீர்மானமும் சட்டப் பேரவையில்நிறைவேற்றப் பட்டது மிகமிகப் பாராட் டத் தக்கது.
.இலங்கையைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் நடைபெறும் எந்த விளை யாட்டுப் போட்டி களிலும் கலந்து கொள்ள ஒப்புதல் அளிக்கக் கூடாது. என்று த.நா.முதல்வர் உத்தர விட்டார்.

# உயர்கல்வி உதவித்தொகையில் ஊழல்.

புதுச்சேரி அரசு மருத்துவம் பொறியியல் மாணவர் களுக்கு உதவித் தொகை வழங்கி வரு கிறது. கல்விக் கட்டணம் செலுத்தாமல் மாணவர்கள் இலவயக்கல்வி பெற்று வருகிறார்கள்.
அவர்களுக்கு வழங்கப் பட்டுவரும் உதவித் தொகையை அவர்களுக்கு வழங்காமல் வழங்கியதாக ஏமாற்றியிருக்கிறார்கள்.

மாணவர்களுக்கு வழங்கப் படும் காசோலையைத் திருத்தி அத்தொகையைத் திருடர்கள் எடுத்துக் கொண் டிருக்கிறார்கள்.
35 இலக்கம் ஏமாற்றியதாக அண்மையில் பாசிக்கில் ஓர் அதிகாரி நீக்கப்பட்டுள்ளார்.

ஊழல்ஒழியுமா?

# ம து

தமிழ்ச்சொல்இல்லை யாம்!கவனமில்லாமல் சொல்வதால் தமிழ்ச்சொற்கள் நாசமாகுமே!சொல்பவர் இதை உணரவேண்டும்.

“மதுவைக் கல்லாமாந்தர் மட்டுமன்றி,பல்கலைக் கழகத் துணைவேந்தரும் உயரறமன்றத் தீர்ப்பாள ருமாகிய கற்றோரும் அருந்து கின்றனர்.” என்றுஎழுதுகிறார் பாவாணர். மண்ணில் விண் என்னும் நூலைப் படித்திருந்தால் இந்த உண்மை தெரிந்திருக்கும். படிக்காமல் யாரும் ஒரு தீர்மானத்துக்கு வரலாமா?

முத்துதல் - பொருந்துதல் சேர்தல் கலத்தல்.
முத்து-மத்து-மத்தம்-கலக்கம்,மயக்கம்.
“மத்தமாம் பிணிநோய்க்கு” தேவாரம்.426-3
ஒ.நோக்கு- கல-கலுழ்-கலுழி-கலக்கம்.கல-கலங்கு-கலக்கு-கலக்கம்.
முயங்குதல்-தழுவுதல்,கூடுதல், கலத்தல்.
முயங்கு-மயங்கு-மயக்கு-மயக்கம்-கலப்பு,கலக்கம்.
முய-முயல்-மயல்,மால்-மயக்கம்.
வெறுத்தல்-செறிதல்,கலத்தல்.
வெறு-வெறி-கலக்கம்,மயக்கம்.
வெறுத்தல் - செறிதல்,கலத்தல்.வெறு-வெறி-கலக்கம்.மயக்கம்.
கலத்தற்கருத்தினின்று கலக்கக் கருத்துத் தோன்றுதல் காண்க.
மத்து-பித்தியம் (பைத்தியம்) உண்டாக்கும் சாற்றுச் செடி(ஊமத்தை)
“மத்தநன் மாமலரும் மதியும் வளர்” தேவாரம்.923-8
மத்தம் என்னும் தென் சொல்லையே உன்னென்னும் முன்னொட்டுச்சேர்த்து வடசொல்லாக்கினர்.
மத்து-மத்தை(ஊமத்தை)-மலை.
மத்தம்-வ.உன்மத்த-ஊமத்தம்,ஊமத்தை.
மத்தம்-மயக்கந்தரும் கடாம்.மத்தமா-யானை.
மத்தம்-மதம்,மதமா-யானை.
மதம்-மதர்-மதர்த்தல்-1.செருக்குதல் 2.களித்தல்
“துப்பருகிப் பருவாளை நின்று மதர்க்கும்” (கம்பரா. நாட்டுப்.24)
3.மதங்கொள்ளுதல். “மதர் விடையிற் சீறி”(பு.வெ.7-14)
மதர்-மதர்வை-செருக்கு,

களிப்பு, மயக்கம்.
மதம்-மதன்-1.செருக்கு மதனுடையநோன்றாள் (பட்டினப்..278)
2.மடமை 3. கலக்கம்
மதம்-1.யானைக்கடாம் "மதயானை"(சீவக.2485)
2.மதுவெறி (மலைபடு.173உரை)
3.தேன். "மதங்கமழ் கோதை" (சீவக.2584)
4.காமமிகை
5.வெறி 6.செருக்கு "போரெதிர்ந் தேற்றார் மதுகை மதந்தப" (பரிபா.18-1)
மதம்-மத-மதத்தல்-மயங்குதல்,கள்ளுண்டுகளித்தல், காமம்மிகுதல்,மதங்கொள்ளுதல், செருக்குதல்.
மத-மதக்கம்-மயக்கம்,மதமதப்பு-திமிர்,செருக்கு
மத்து-மது-1.கள் "மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சிபோல" (தொல்.பொருள்.உரை.114)
2.தேன்."மதுவின் குடங்களும்" (சிலப்.25.38)
மத்து-மட்டு-1.கள்."வெப்புடைய மட்டுண்டு (புறம்.24)
2.மட்டுவாயவிழ்ந்ததண்டார்" (சீவக.98)
3.கட்சாடி "மட்டுவாய் திறப்பவும்"(புறம்.113)
மட்டுவார்குழலம்மை"என்பது மலை மகள் பெயர்களுள் ஒன்று. மதம்.OE.gemad,E.mad
மது.Gk.methu,AS.medu,ME.mede OE.meodu,E.mead,OHG.metu, MLG.mede,ON.mjqthr,L.mel,Gmeth, Russ.med,W.medd,Lith.middus, .mjod,Dan.miod,Sw
மது என்னுஞ் சொல் தமிழில் அருகியும்வடமொழியிற் பெருகியும்வழங்குவதனாலே யே, அது வடசொல்லெனக் கருதப்படுகின்றது.

---

**"சிம்"** என்பதன் விரிவென்ன?
இதைத்தமிழில் எப்படிச் சொல்வது?
sim> subscriber identity modul
கட்டணர் அடையாளச் செயலி

---

"வத்திக்குச்சி படத்துக்கு உன் காதலரோட போனது தப்பாப் போச்சா ஏன்?"

"ஒரேயடியா உரசிட்டாரு.."

# சிலப்பதிகாரம் ஒரு தமிழ்த் தேசியப் பாவியம்

முனைவர் க. தமிழமல்லன்

தமிழ்மன்னர்கள் ஒரே நாளில் தங்கள் வேறுபாடுகளைக் கைவிட்டு ஒன்றாகிவிடுவர் என்று அவர் எதிர்பார்க்க வில்லை. அவர்கள்தங்களின்தனிவரலாறு, பெருமை இவற்றைக் கைவிடவேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கவில்லை. அவற்றுக்கு அப்பால் அவர் எண்ணியதால் அதன் எதிரொலியாகச் சில பண்புகளைமட்டும் எதிர்பார்த்திருக்கக்கூடும். அவையும் நிறை வேறா என்பதை அவர்உணர்ந்திருந்த கரணியத்தால் அதற்கேற்பவே கதை அமைப்பையும் அமைத்துக் கொண்டுள்ளார்.

**கதைத்தலைவி**

பாவியத்தின் தலைமை மாந்தர் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பது ஒரு மரபு. வடநாட்டுப் பாவியங்கள் அப்போக்கிலேயே அமைந்துள்ளன. ஆனால் தமிழில் தோன்றியவை சற்று மாறுபட்டு விளங்குகின்றன. சிலப்பதிகாரம் மட்டுமனிறி மணிமேகலையிலும் இப்போக்கைக் காணலாம்.அரச குடும்பத்தைச்சேர்ந்த இளங்கோவடிகள் அரசகுடும்பத்துத் தலைவன் அல்லது தலைவியைமுதன்மை மாந்தராக்காமல் தவிர்த்தார். அதற்கு அவர்உள்ளத்தில் கருக்கொண்டிருந்த தமிழ்த்தேசிய உணர்வு கரணியமாகும். அதனால்தான் தம்பாவியம் சோழநாட்டுக்கு மட்டும் உரியதாகவோ சேரநாட்டுக் குரியதாகவோ அமைந்துவிடாமல் தமிழ் நிலம் முழுவதற்கும் உரியதாகச்செய்தார். அதற்காகவே கண்ணகி என்னும் ஒருபெண்ணைத் தலைமை மாந்தராகப் படைத்தார்.அவளை மூன்று நாடுகளிலும் நடக்கவிட்டார்.

*வணிகக் குடும்பத்துப் பெண்ணான அவளுடன் எல்லா மக்களும் கதையில் பங்கேற்று அன்பு பாராட்டும் கதை நிகழ்ச்சிகளை அமைத்தார்.*

**உண்மைக் கதை**

*சிலப்பதிகாரத்தின் தனித்தன்மைகளுள் முதன்மை யானதாக அது, உண்மையில் நிகழ்ந்த கதை என்பதைச் சொல்லலாம். வடநாட்டுப் படையெடுப்பு, சிலையமைக்கக் கல்கொணர்தல், பனி (இமய) மலையில் சின்னம் பொறித்தல் போன்ற செய்திகளைக் கற்பனை என்று சிலர் கூறுவர். அப்போக்கு அவர்களுக்கு எதிர்ஆய்வுசெய்யும் திறம் உண்டு என்பதைத்தான் காட்டும். அவர்கள் தமிழ்நாட்டுச் செய்திகளில் மட்டுமே தங்கள் ஆய்வுத் திறத்தைக்காட்டுவார்கள். அலெக்சாந்தர் படையெடுப்பை உண்மை என்றும் அவன்பெருமை மிக்கவன் என்றும் எழுதப்பட்டுள்ள வரலாற்றை அப்படியே ஒப்புக் கொள்வார்கள். அதைத்திறனாய்வு செய்ய முன்வர மாட்டார்கள்.*

*அசோகர் கலிங்கம் வரை படையெடுத்து வந்தார், என்னும் செய்தியை அப்படியே ஒப்புக் கொள்வார்கள். அவருடைய மனமாற்றத்தை வியந்து பாராட்டுவார்கள். குறை சொல்ல மாட்டார்கள்.*

*--இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன்,நூற்றுவர் கன்னர், சேர,சோழ, பாண்டிய நாடுகளை உண்மையானவற்றைத்தாம் கதையில் இணைத்து எழுதினார். அவை கற்பனையல்ல. காவிரி, வையை போன்ற உண்மையான ஆறுகளைத்தான் வண்ணித்தார். அவை கற்பனையல்ல. கண்ணகி, கோவலன் போன்ற மாந்தர்கள் கூட உண்மையில் வாழ்ந்தவர்களாகவே இருந்தார்கள். அப்பெயர் உடையவர்தம் பெயர்கள் அவர் பாவியத்தில் மட்டுமின்றிப் பலஏடுகளிலும் தொடர்ந்து வரக்காண்கிறோம்.*

*எனவே இந்தக்கதை முற்றிலும் கற்பனை எனக்குறை சொல்லுதல் சரியாக இருக்காது.*

*தமிழ்நாட்டு வரலாற்றுக்கு வலிவுதரும் சான்றுகளுள் இலக்கியங்களை முதன்மையாகச் சொல்லவேண்டும். அச்சான்று*

*களோடு தொடர்புடைய கட்டுமானங்கள் அழிக்கப்பட்டதால் அவற்றைக்காட்ட இயலா நிலையால் மட்டும் வரலாறு பொய் என்று சொல்லக்கூடாது.*

*கிரேக்க நாட்டு வரலாற்றுக்கு முதன்மைச்சான்றுகளாக "இலியது", "ஒடிசி" என்னும் ஓமரின் பாவியங்களைத்தாம் காட்டுகின்றனர். ஓமர் பிறவியிலேயே பார்வையில்லாக் குருடர். அவர் எதையும் பார்த்திருக்க வாய்ப்பில்லை. செவி வழிகேட்டுத் தான் எழுதியிருக்கவேண்டும். சொன்னவர்கள் சொன்ன வற்றைத்தான் அவர் எழுதியிருக்கவேண்டும்.*

*குருடரான அவர் இயற்றிய நூல்களைப் பெரிதாக மதிக்கும் நம் மக்கள் வெளிப்படையாகப் பேசும் இளங்கோ வடிகளின் சிலப்பதிகாரத்தை மறுப்பதும் குறைசொல்வதும் அறமாகுமா? வையாபுரியார் போன்ற திரிபாராய்ச்சியாளர்கள் இப்படிச்சொல்வது வழக்கம். அவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்.*

*"திரிபாராய்ச்சியாளர்களுக்கு அவரே விடைசொல்லி யிருக்கிறார். வரலாற்றில் சந்திரகுப்தன் படையெடுப்பு, அசோகர் படையெடுப்பு, இராசேந்திரன் படையெடுப்பு இவற்றை நம்புகின்றனர். அப்படியானால் சேரன்செங்குட்டுவன் படையெடுப்பை ஏன்நம்ப மறுக்கவேண்டும்?" என்று அவர் வினவினார்.[4] (குடிமக்கள்காப்பியம்-தெ.பொ.மீ ப.19 )*

*"சிலப்பதிகாரக் கதை புனைந்துரையன்று, உண்மையில் நிகழ்ந்த வரலாறு என்பது மபொசியின் கருத்து."[5] சிலப்பதிகாரத் திறனாய்வு ப.53) உண்மை வரலாறு என்று ஏற்றுக் கொள்வதில் எந்தப் பிழையும் வந்துவிடாது. மறுப்பது வரலாற்றுக் கிழைக்கும் மாசாகும்.*

**தேசியம்**

*தேசம் என்னும் எண்ணத்தில் பல கூறுகள் அடங்கி யிருக்கின்றன. குடும்பம் என்பதில் தலைவர் தலைவி குடும்ப உறுப்பினர்கள் அவர்களுடைய எதிர்காலம் அவர்கள் மற்றக் குடும்பங்களோடு கொண்டுள்ள தொடர்புகள் எல்லாம் அடங்குகின்றன. தாய்,தந்தை, குழந்தைகள்,பாட்டன்,பாட்டி என ஒரு குடும்பம் அமைந்துள்ளது. தந்தைக்குரிய கடமைகள்*

தாய்க்குரிய கடமைகள் எனத் தலைமையில் இருப்போர்க்கு உரியனவானவாய் இருக்கின்றன. இது பாவேந்தர் குடும்பம், இது புலவர் குழந்தையின் குடும்பம் என்று அடையாளங் காட்டப்படும்.

அது போல ஒரு மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு ,மரபு, நிலவெல்லை போன்றவை ஒரு குறிப்பிட்ட குமுகாய மக்களிடையே மனமார்ந்த பிணைப்பை ஏற்படுத்திவிடும். மக்கள் கூட்டத்திடையே இருக்கும் ஒற்றுமை அவர்களை அடையாளங் காட்டப் பயன்படும்.

மரக்கறி உணவுண்ணும் மக்களிடத்தில் ஒற்றுமை காணப் படலாம். உணவு ஒன்றினால் மட்டும் அவர்களிடத்தில் முதன்மையான ஒற்றுமை காணப்படும். அவர்கள் உலக முழுக்கப் பரந்து கிடப்பார்கள். மரக்கறி உண்ணும் அமெரிக்க நாட்டார், சிங்கப்பூர்க்காரர், இங்கிலாந்துக்காரர் என்றுதான் அடையாளப் படுத்தப்படுவார். அவர்களிடம் அமைப்போ செயற்பாடோ இருந்தால் கூட அவர்கள் ஒருநாட்டாரராகக் கருதப்பட மாட்டார். அவர்கள் ஒன்று சேர்ந்து மரக்கறி உண்பவர் நாடு என அமைக்கும் எண்ண எல்லையில் வரவும் இயலாது.

மொழி, இலக்கியம்,பண்பாடு போன்றவையே பெரும்பங்காற்றி அத்தகைய வாய்ப்பை ஏற்படுத்தி விடும். அவற்றால் ஏற்படும் பிணைப்பு ஒரு நாடாக அமைந்திருக்கும். அல்லது நாடாக அமைய வாய்ப்பை ஏற்படுத்தும். அதற்கென எல்லை உண்டு. வரலாறு இதைத்தான் காட்டுகிறது. அந்தக் கூறுகளின் செயல் விளைவே தேசியம் எனப்படும். அதை நாட்டினம் என்றும் நாட்டியல் என்றும் கூறலாம்.

நாட்டினம் என்பதற்கு ஈடான ஆங்கிலச் சொல் நேசன் ---என்பது. அதன் மூலம் நேடியோ என்ற இலத்தீன் மொழிச் சொல்லாகும். அச் சொல்லின் பொருள் பிறந்தது, பிறந்த இடம் என்பதாகும். அதன் வேர்ச்சொல் நாட்டசு ----என்பது. அதை அப்படியே கடைசி எழுத்தை நீக்கிவிட்டுப் படித்தால் நாடு என்று தான் வரும். “நாடு” என்பதே இலத்தீனில் “நாட்டசு”ஆகி யிருக்க வேண்டும்.

எனவே தேசியம் என்பதை நாட்டினம் என்று சொல்லலாம். தாலின் இவ்வரையறையைத்தான் நாட்டினம்

என்பதற்கு வழங்கியிருக்கிறார்.

**அயர்லாந்துத் தேசியம்**

இங்கிலாந்து நாட்டின் அருகில் இருப்பது அயர்லாந்து. அவர்களும் வெள்ளையர்களே.ஆனால் அவர்களுக்கென்று தனி மொழி உண்டு. அந்நாட்டை இங்கிலாந்து தன் அடிமை நாடாகவே வைத்திருக்க விரும்பியது.. அயர் மொழியின் உரிமை யை மக்கள் நிலைநாட்ட நெடுங்காலப் போராட்டத்தை நடத்தினர். திவேலரா என்னும் தலைவர் அந்நாட்டு மொழிப் போராட்டத்தில் தீக்கிரையானார் என்பது வரலாறு. நாங்கள் அயிரிசு மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டவர்கள். எங்களுக்கென்று தனிப்பண்பாடு, வரலாறு, நாகரிகம் உண்டு. நாங்கள் உங்களோடு சேர்ந்திருந்தால் அவற்றின் தனித் தன்மை களை இழக்க வேண்டிவரும். நாங்கள் இழக்க விரும்ப வில்லை. எங்களுக்கென்று தனிநாடு தேவை என்று போராடினர். வென்று தனிநாடு அமைத்துக்கொண்டனர்.

---

**நகைச்சுவை**

1. முதல் படத்துலயே ரொம்ப அலட்டிக்கிட்ட நடிகையைஇயக்குநர் பழிவாங்கிட்டாரா எப்படி?

2.அவங்க பேருக்கு முன்னால 'அறிமுகம்'னு போடறததுக்கு (பதிலா)மாறா 'சொறிமுகம்'னு போட்டுத்தான்.

3.உங்க குழந்தையைப் பாட்டுப் போட்டுத் தூங்க வைப்பீங்களா? தொலைக்காட்சி போட்டுத் தூங்க வைப்பீங்களா?

முதுகிலே ரெண்டு போட்டு.

---

அந்த ஏடு 'எது? இந்த நகைச்சுவைத் துணுக்குகள் அண்மை யில் ஒரு கிழமை ஏடு வெளியிட்டவை. அதில் எல்லாம் தனித்தமிழ் அமைத்துள்ளதாக அறிவித்திருந்தார்கள். அந்த ஏடுஎது?

# மல்லன் பாக்களில் பகுத்தறிவு

முனைவர் எழில் வசந்தன்
ஆய்வாளர்,செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்

---

"மல்லன் பாக்கள்" என்னும் நூலில் இவ்வாறு எல்லா வகையிலும் பகுத்தறி வற்றுச் செயற்படும் மக்களைச் சுட்டும் பாவலர் க.தமிழமல்லன். நாட்டில் இயற்றப்பட்டிருக்கும் சட்டங் களையும் பகுத்தாராய்விற்கு உட்படுத்துகிறார்.

பொதுநன்மை காப்பதற்காய்
இந்த நாட்டில்
போட்டிருக்கும் சட்டங்கள்
படச்சட் டங்கள்
எதுசெய்தும் சட்டத்தை
வளைத்து விட்டே
எப்போதும் அதன்நிழலில்
குற்றஞ் செய்வார்!
புதுப்புதிதாய்ச் சட்டங்கள்
வந்தா லென்ன?
புல்லடியில் போட்டுமிதிப்
பார்கள் என்றால்?
எதுவரினும சட்டத்தால்
நன்மை செய்ய
இளையதலை முறையினர் தாம்
முயல வேண்டும்!

இன்றைய நிலையில் வழக்காடு மன்றங்களும் சட்டங் களும் பணம் படைத்தனுக்கும் வலிமை படைத்தவனுக்கும் மட்டுமே வளைந்து போவதாக உள்ளன. அவ்வாறு செல்வ தைத் தடுத்து மெய்யாகவே அனைவருக்கும் சம நயன்மை

கிடைக்க வேண்டுமாயின் அஃது இளைஞர்களின் கையிலேதான் உள்ளது. வலிமை படைத்த இளைய தலைமுறையினர் தாம் வலிமையான இந்தியாவை உருவாக்க முடியும். இன்றைய இளைஞர்கள் திரைப்படம், மட்டைப்பந்து போன்ற மாயைகளுக்கு இடங்கொடாமல் விழிப்போடு செயல்பட்டால் தான் உண்மையான குமுகநயன்மை கிமைக்கும் என்பதனை மேற்சுட்டிய பாடல்வழிப் பாவலர் வெளிப்படுத்துகிறார்.

மக்களின் மூடத்தனங்களை எண்ணிக் கவலை கொள்ளும் பாவலர் வணிகம் என்பது வளர்ச்சிக்கு உதவவேண்டும் அஃது மடமையை வளர்ப்பதாக இருத்தல்கூடாது என்கிறார். வணிகத்தை அவர் சுட்டக் கரணியம் உண்டு. மூடத்தனத்தில் திளைக்கும் மக்கள் கைகளில் கயிறுகள் பலவற்றைக் கட்டிக் கொண்டு அதற்குப் பல கரணியங்களைச் கூறிச் செல்வதை மூடநம்பிக்கை எனும் பாடலில் தெளிவுபடுத்துதுகிறார்.

கைகளில் மக்கள் கயிற்றைக் கட்டிக்
கண்ணா மூய்ச்சிக் கண்திறந் தாடுவர்
கோயில் குருக்கள் கொடுத்தா ரென்றும்
பேயின் தீமை பெயர்க்கும் என்றும்
ஆய்வறி வின்றி அடுக்காய்க் கயிற்றை
நோய்மன மக்கள் நோகா(து) அணிகிறார்.

என்று கூறும் பாவலர் அதனைத் தடுக்கும் வழிமுறையாகப் பின்வருமாறு எழுதுகிறார்.

அறிவுடை அரசு அணையைப் போட்டு
நெறிகெடு முறையை நேர்படுத் திடுமா?
கைக்கயி றெதுவும் கடைகளில் விற்பதை
மெய்யறி வாலே தடுப்பதே மேன்மை!
மாடு கட்டும் கயிறு விற்கலாம்
ஆடுகட்டும் கயிறு விற்கலாம்
அறிவைக் கட்டும் கயிற்றை
அணுக விடாமல் அதிரடி தருகவே.!

என மூடநம்பிக்கையில் உழலும் மக்களின் நிலையை எண்ணி எள்ளி நகையாடுகிறார்.

இன்றைய உலகமயமாக்கச் சந்தையில் பொருளியல் நெருக்கடி எனும் கருவி (ஆயுதம்) தீராத தலைவலியாக இருந்து வருகிறது. பல பொருளியல் வல்லுநர்களே சிக்கல் தீர வழியறி யாது திகைக்கும் நிலையில் குசராத்து மாநிலத்தில் வேதியர்கள் ஒன்று கூடி உருவா நூற்றைம்பது கோடியைச் செலவு செய்து சிக்கல் பல தீரும் என்று கூறிய செய்தியை நடுவாகக் கொண்டு நெருக்கடி எனும் தலைப்பில் அமைந்த ஒருபாடலில் சுட்டுகிறார்.

ஆயிரம் வேதியர் ஆண்டிரண் டாக
வாயுரம் கொண்டு வேள்விகள் செய்தே
ஆயிரத் தைந்நூ றிலக்கம் உருவா
ஆயிடும் செலவால் அகற்றிடு வாராம். ப.163

இவ்வாறு வீணாக்கப்பெறும் பணத்தை ஆக்கமான செயற்பாடுகளுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

நூற்றைம்பது கோடி நொறுங்கி விடாமல்
ஆற்றில் தடுப்பணை அமைக்கலாம்! அழிபசி
போக்கும் உழவைப் புதுக்கலாம்! வேலை
ஆக்கலாம்! இளைஞரைக் காக்கலாம் அன்றோ?
வேத வேள்விகள் வளர்த்திடல் எதற்கோ?
வேதியர் பொருளியல் நெருக்கடி விரட்டவே! ப.163

என்கிறார். இப்பாடலின் வழி ஆசிரியர் கூறவரும் கருத்து, மக்களுள் பலர், ஏமாற்றி வந்திருப்பதனையும் அதற்கும் ஒரு படி மேலே போய் மாநிலம் முழுமையும் ஏமாற்ற வேதியர் போட்ட திட்டத்தைப் பாவலர் தமக்கே உரிய எள்ளல் நடை யிலேயே கூறுகிறார்..அதாவது குசராத்து வேதியர்கள்மாநிலப் பொருளியல் நெருக்கடியை விரட்டுவதற்காகப் போட்ட திட்டமன்று அது. மாறாக அவர்களின் பொருளியல் நெருக் கடியை விரட்டிக் கொள்வதற்காகப் போட்ட திட்டம்

அத்திட்டம் என்பதனைச் சவுக்கடி போல் கொடுக்கிறார். அதே வேளையில் தீமூட்டி வேத வேள்விகள் செய்வதால் நாட்டின் நெருக்கடி எவ்வாறு தீரும்? நாட்டில் பலர் மக்களின் வரிப் பணத்தினை இப்படியான மடத்தனங்களில் செலவிட்டு அழிக்கின்றனர். மக்களும் சிந்தனை அற்றோராய் அனைத்தையும் ஏற்கின்றனர் எனும் கருத்தினை இப்பாடல் பதிவு செய்கிறது.

**நிறைவாக**

"மல்லன் பாக்கள்" எனும் இப் பாநூலில் அமைந்துள்ள அனைத்துப்பாக்களுமே நம்மைச் சிந்திக்கத் தூண்டும். சிந்தனையே பகுத்தாராய்விற்கு வழி வகுக்கும். அவ்வகையில் இக்கட்டுரையில் சில பாக்களே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

இப்பாடல்களை அசைபோடும் போது ஒன்றுமட்டும் உள்ளெழும்புகிறது. அது, நம்மக்கள் ஏன் சிந்திக்கும் ஆற்றல் இருந்தும் அசைவற்று இருக்கிறார்கள்? மேலைநாடுகளில் தோன்றியது போல் மாபெரும் புரட்சிகள் ஏன் இங்குத் தோன்றவில்லை? என்பனவே அவ்வினாக்கள்.

நெஞ்சத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது கிழக்கு. சிந்தனையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது மேற்கு. மேற்கத்திய மனப்பான்மை மிகப்பெரிய அறிவியல் கண்டுபிடிப்புகளை உருவாக்கியிருக்கிறது. அவ்வகையில் "மல்லன் பாக்கள்" பகுத்தறிவுச் சிந்தனைகளின் கருவூலமாகத் திகழ்கின்றது. பாடலின் வெற்றி என்பது சுவைக்க மட்டுமின்றிச் சிந்தனையையும் கிளறிவிட வேண்டும். அவ்வகையில் இப்பாநூலின் ஆசிரியர் நூற்றுக்கு நூறு விழுக்காடு அதனைத் தம் வினாவாகவும் விடையாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.

---

*கொலை பண்ணிட்டுத் துணிச்சலா*
*காவலரிடமிருந்து எப்படித் தப்பி வந்தீங்க?*

*இத்தாலின்னு சொன்னோம்.*
*அவங்களே விட்டுட்டாங்க!*

---

மாணவர் பக்கம்

# பயன் மொழிகள்

அ.செயபாலகநாதன்



வெற்றி என்ற ஏணியின்
உச்சியில் கூட்டம் இருக்காது.
-நெப்போலியன்

தனக்குக் கிடைக்கும்
வருவாயைக் காட்டிலும்
அதிகமாகச் செலவு செய்பவன்
ஓர் ஏழை -பிருயெரி



எப்போதும் வருத்தத்தைச்
சுமந்து செல்பவன்
மற்றவர்களைக் கவரும்
மாந்தனாக உருவெடுக்க
இயலாது.-நெப்போலியன் இல்

சிரியுங்கள்.உலகம் உங்களுடன்
சேர்ந்து சிரிக்கும். அழுங்கள்.
நீங்கள் ஒருவர்தான் தனித்து
அழுது கொண்டிருப்பீர்கள்.-
இராபர்ட் லூயிசுதீவன்சன்

கடந்த காலத்தில் நாம்
செய்தவற்றைப் பொறுத்து
நிகழ்கால வாழ்க்கை
அமைகிறது.நிகழ்காலத்தில்
நாம் செய்து வருவதைப்
பொறுத்து எதிர்காலம்
அமைகிறது.-விவேகானந்தர்.

மாணவர் பக்கம்

சிறுவர் சிறுகதை(தொடர்ச்சி)

## முனிவரின் குழந்தை

முதுமையினால் தொல்லைப் பட்ட கிழவியை இளம்பெண்ணாகத் திருமழிசையாழ்வார் மாற்றிவிட்டார். அதைக் கேள்விப்பட்ட காஞ்சி மன்னன் நேரில் சென்று பார்த்தார். பார்த்தாரா? அந்தப் பெண்ணுக்குப் பட்டாடைகள் பொன்அணிகள், எல்லாம் சீர்களாகக் கொடுத்தான். அவளைத் திருமணம் செய்துகொண்டான். பட்டத்து அரசியாகிய பின்னர் அவள் பல குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அப்போதும் அவள் இளமையாகவும் அழகாகவும் இருந்தாள். அரசன் மட்டும் முதுமையடைந்தான்.

நீ இன்னும் இளமை யாகவே இருக்கிறாயே எப்படி? என்று தன்மனைவியைப் பார்த்துக் கேட்டான்.


திருமழிசையாழ்வார் அருளினால் தான் நான் இளமை மாறாமல் இருக்கிறேன் என்று அவள் சொன்னாள்.

அப்படியா? அப்படியானால் எனக்கும் அந்த அருள்கிடைத்தால் நன்றாயிருக்குமே? நாம் இருவரும் எப்போதும் சிறப்பாக இருக்கலாமே? என்றான்.

அந்தக்காலத்தில் துறவிகள் பாழிகளில் இருப்பார்கள். மாலை நேரத்தில் வீடுகளுக்குச் சென்று இரப்பு (பிச்சை) எடுப்பர். அரண்மனைக்கும் வருவர்.

திருமழிசை யாழ்வாரின் மாணவர் கனிகண்ணன். அவரும் அரண்மனைக்கு வருவார். வந்து உணவு பெற்றுச் செல்வார்.

பட்டத்தரசி சொன்னாள் :



அரசே திருமழிசையாழ்வாரின் மாணவர்தான் கனிகண்ணன் அவரை அணுகிக் கேட்டால் தங்கள் ஆசை நிறைவேறும் என்றாள்.

மனைவி சொன்னது போலவே அரசன் முயன்றேன். மறுநாள் வழக்கம்போலக் கனிகண்ணன் வந்தார். அவரைத் தனியே அழைத்தான் அரசன். கனிகண்ணர்க்குச் சிறப்பான கவனிப்புக் கிடைத்தது. அவரை அரசன் சிறப்புச் செய்தான். கடைசியில் தன் விருப்பத்தைச் சொன்னான். கனிகண்ணரே நான் உங்கள் குருவை வணங்க வேண்டும்.தாங்கள் அவரை இங்கே அழைத்துவரவேண்டும் என்று சொன்னார்.

அதைக் கேட்ட கனிகண்ணன் சிரித்துக் கொண்டார். அரசே குருவைத் தேடி மாணவர்கள் தாம் செல்ல வேண்டும். மாணவர்களைத் தேடிக் குரு வரமாட்டார். அதனால் நீ நினைத்தது நடக்காது என்றார்.

சரி,போகட்டும். என்னை உன் குருவிடம் அழைத்துச் செல்லுங்கள். என்னையும் இளமையும் அழகும் உடைய ஆடவனாக மாற்றச் சொல்லுங்கள் என்றான் அரசன். அரசே உன்னைப் போன்றவர்களையெல்லாம் என்குரு திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார். உன்னையெல்லாம் இளைஞனாக்குவதை அவர் விரும்ப மாட்டார்.உலக இன்பங்களில் பற்றுக் கொண்டவர்களை அவ்வாறு செய்வதில்லை என்றார்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அமைச்சர்கள் மன்னன் வருத்தந் தீருமாறு சில சொற்களைக்கூறினார்கள். அரசே இந்தக் கனிகண்ணனும் சிறந்த புலவன். அவன் வாயால் ஒரு பாடல் பெற்றாலும் உங்களுக்குப் பெருமைதான் எனவே அவனைப்பாடச் சொல்லலாம் என்று கூறினர். பாட்டால் பல விந்தைகள் செய்த அவன் உங்கள்மேல் பாடல் பாடினாலும் உங்கள் விருப்பம் நிறைவேறக் கூடும் என்று கூறினர்.

மறுநாளும் கனிகண்ணன் வழக்கம் போல அரண்மனைக்கு

வந்தார். அரசன் தன் விருப்பத்தைக் கூறினான். நான் இளமை யடையு மாறு ஒருபாடல் பாட வேண்டும் என்று வேண்டினான்.

கனிகண்ணன் பாடினாரா? என்ன சொன்னார்?

அரசே நான் எப்போதும் திருமாலைத்தான் வேண்டிப்பாடுவேன். பொதுவான மாந்தர் யாரையும் பாடமாட்டேன் என்று மறுத்துவிட்டார்.

மன்னன் அவரை விடவில்லை. தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டே இருந்தான். கடைசியில் ஒருபாடல் பாடினார் கனிகண்ணன்.

ஆடவர்கள் எங்ஙன் அகன்று
ஒழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும்
பஞ்சரமா-நீடியமால்
நின்றான் இருந்தான்
கிடந்தான் இதுவன்றோ
மன்றார் பொழில்கச்சி மாண்பு.

என்னும் ஒரு பாடலைப் பாடிவைத்தார். அதைக் கேட்ட அரசனுக்கு மிகுந்த சினம்.என்னைப்பாடச் சொன்னால் என் நகரத்தைப்பாடுகிறாயே என்று கேட்டான். அத்துடன் நிற்கவில்லை.

அரசனாகிய என்னைப் பாடச் சொன்னால் மறுக்கும் நீ இந்த நகரத்தில் இருக்கவே கூடாது வெளியேறு என்று கட்டளையிட்டான்.

கனிகண்ணன் ஒன்றுஞ் சொல்ல வில்லை.நேரே தன் குருவாகிய திருமழிசையாழ்வாரிடம் போனார்.நான் இந்த நகரைவிட்டுப் போகிறேன் விடைகொடுங்கள் என்றார். நீ யில்லாத இந்த இடத்தில் எனக்குமட்டும் என்னவேலை? என்று கேட்ட அவர் திருமாலின் கோயிலுக்குச் சென்றார். நாம் இருவர்மட்டும் வெளியே செல்லக்கூடாது. நாம்இல்லாத இடத்தில் பெருமாளுக்கும் வேலையில்லை. நாம் மூன்றுபேரும் வெளியேறி விடலாம் என்று சொல்லி ஒரு பாடலைப் பாடினார்.

அந்தப் பாட்டு எது தெரியுமா? இதுதான்

கணிகண்ணன் போகின்றான்
காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க
வேண்டா-துணிவுடைய
செந்நாப் புலவனும்
போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

திருமால் வெளியேறிச் சென்றதால் மற்றத் தெய்வங்களும் நகரை விட்டுச் சென்றுவிட்டன. அதனால் கதிரவனும் அந்த நகரத்தை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. எப்போதும் அங்கே இரவாகவே இருந்தது.

அரசனுக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. அமைச்சர்களுடன் திருமழிசையார் கணிகண்ணன் இருவரும் இருக்குமிடத்தைத் தேடியலைந்து கண்டுபிடித்துக் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். தன்பிழையைப் பொறுத்துக் கொள்ளு மாறு வேண்டினான். அவன் தன் பிழையை உணர்ந்து திருந்தி வந்ததை அறிந்து அவனை இருவரும் மன்னித்தார்கள். நகருக்குத் திரும்புவதாகச் சொன்னார்கள். திருமால் மீண்டும் திரும்ப வேண்டுமல்லவா? அதற்காக ஒரு பாடல் பாடப்பட்டது. அது இதுதான்.

கணிகண்ணன் போக்கொழிந்தான்
காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க
வேண்டும்-துணிவுடைய
செந்நாப் புலவனும்
போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்.

இந்தப்பாட்டைக் கேட்ட திருமால் மீண்டும் திருவெஃகாவுக்கு வந்துசேர்ந்தான்.

இந்தக் கதை, பாட்டின் வலிமையையும் பெருமையையும் உணர்த்துவதற்கு நன்றாகப் பயன்படும் என்று எடுத்துக் கொள்ளலாம். சமயஞ்சார்ந்தவர்கள் தங்கள் தகுதிக்கேற்பத்தமிழின் பெருமையை அவ்வக்காலங்களில் நிலைநாட்டியிருக்கிறார்கள். அதனுடைய அடையாளமே இக்கதை.



செயலின்மை, வீடு
**அகராதி** - (வ,த)- அகரமுதலி, அகரவரிசைச் சொற்பொருள் நூல்
**அகராதிக் கிரமம்**-வ,அகரம் முதலாக வருமுறை
**அகரு** - அகில்
**அகருதம்,வ**-வீற்றிருக்கை
**அகர்ணம்,வ**-செவிடு, பாம்பு, செவியிலி
**அகலக்கவி,வ,த**-அகலப்பா பாடும் பாவலர்
**அகலக்கால் வைத்தல்**-அளவு கடந்து போதல்
**அகலம்**-விரிவு,மார்பு, விளக்க வுரை, நீளம், வேப்பலகு, யானைத் திப்பிலி
**அகலம்புகுதல்**-மார்பிடத்தே முயங்கல்
**அகலர்**-தீண்டாதவர் (பழையகாலம்) கடவுள்,
**அகலல்**-நீங்கல்,செல்லல், விரிதல்
**அகலாங்கண்**-அகன்ற ஊரிடம்
**அகலறை**-பாசறை,மலைப் பக்கம்
**அகலன்**-ஏழை, கடவுள், பெருத்தவன், பெருமை யுடையவன், கொடியவனல்லா தவன்
**அகலிடம்** -நிலவுலகம்
**அகலுள்**-அகலம், தெரு,ஊர், நாடு, பெருமை
**அகல்**-சட்டி, விளக்குத் தகழி, ஔரவு, அல்குல், வெள்வேல்
**அகல்வு**-அகலம்
**அகவல்**-ஆசிரியப்பா
**அகவிதழ் - உள்வரிசைப் பூவிதழ்**
**அகழாய்வு**-நிலத்தைத் தோண்டி ஆய்தல்
**அகழி**-நீர்க்காப்பு அரண்
**அகழெலி**-வயல்எலி
**அகவிலைப்படி**-விலை உயர்வுக் கேற்ற சம்பளஉயர்வு
**அகவுயிர்** - ஆதன் (ஆன்மா)
**அகவை**-வயது(வ)
**அகழ்பொறி**-தோண்டும் கருவி
**அகவடி**-உள்ளங்கால்,காலடி, அடிச்சுவடு
**அகவயிரம்**-அகக்காழ்
**அகவர்**-மங்கலப்பாடகர், புகழ்வோர்.
**அவுஸ்,ஆ**-இல்லம்
**அவுட்புட்,ஆ**-வெளியீடு

(வ-வடசொல்,வ,த-வடசொல் லும் தமிழும் கலந்ததுஆ- ஆங்கிலம்)

பாச்சோலை

## உரிமைக்குரல் கொடுப்போம்

பாவலர் கோ.கலியபெருமாள்



மாந்தரின் வினையால் மலர்ந்திடும் பயன்கள்
வாழ்வினில் ஒளிர்ந்திட வேண்டும்!
மாந்திடுந்தேனை வண்டுணும் பாங்காய்
மகிழ்வுறும் கடமைகள் வேண்டும்!
ஏந்திடும் மனத்துள் கண்டநல் லுணர்வே
எங்கணும் சூழ்ந்திடல் வேண்டும்!
தீந்தமிழ் ஓங்கத் திறம்படப் பணிகள்
சிறப்புடன் புரிந்திடல் வேண்டும்!

எல்லையை மீறும் பகைவரின் போக்கை
எதிர்த்திடும் வேங்கையாய் நிற்பாய்!
வில்விடும் அம்பாய் வீணரின் செயலை
விரைந்துமே அழித்திட விரைவாய்!
வெல்லுதல் காணும் கடமைகள் புரிய
விழைந்துமே விரைவினைக் காண்பாய்!
சொல்லுறும் நயமாய்த் திகழ்ந்திட நாளும்
சோர்வினை அகற்றியே வாழ்வாய்!

தன்னினம் மாயப் பார்ப்பதோ கொடுமை
தகுபணி தமிழனே புரிவாய்!
நண்ணுவோம் அரசை நலமெலாம் பெருக
நாளுமே ஒன்றெனத் திரள்வாய்!
மண்டிடும் பொதுமை மகிழ்வுறக் காண
மண்ணினில் பழமையை விடுப்பாய்!
திண்ணமாய் உரிமைக் குரலினை ஒலித்தே
சிறப்புறும் நலங்களைக் காப்பாய்!

---

அந்த ஏடு குமுதம். பாராட்டுவோம்



# வள்ளலாரின்ஆதனியற் (ஆன்மீக)பட்டறிவு

ஆ.சுரேசு, முனைவர்பட்டஆய்வாளர்
அரசினர் கலைக்கல்லூரி,அரியலூர்

## முன்னுரை

*வள்ளலார் வாழ்ந்த காலமான 19ஆம் நூற்றாண்டில் குலம்,சமயம்,நிறம்,இனத்தின் காரணமாக மக்கள் இனம் பிளவு பட்டு ஒற்றுமையின்றி வாழ்ந்தது. இதனால் மக்களுக்குள் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும்நிலை நாட்டில் நிலவி வந்தது. இந்நிலைகளை உணர்ந்த வள்ளலார் குமுகாயத்தை மாற்றச் 'சங்கம்'முதலியன அமைத்து அதன்வழி மக்களைத் திருத்தவும் ஆதனியற் செலவின் வாயிலாக(ஆன்மீகப்பயணத்தின்மூலம்) இறைவன் நிலையை அடைவதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைத்தார்.*

## சமரச சுத்த சன்மார்க்கசங்கம் (பொதுநிலைத் தூயமெய்ந் நெறிக் கழகம்)

*வள்ளலார் 1865 இல்சமரச சுத்த சன்மார்க்க சங்கம்(பொதுநிலைத் தூயமெய்ந்நெறிக்கழகம்) அமைத்தார். மாந்தன் சமயம், மெய்ப் பொருள் குலத்தைக் கடந்து முழுமை யாக மாந்தன் மாந்தனாக வாழவேண்டும் என்பதை வள்ளலார் அதன் கொள்கை வழி எடுத்துரைத்தார். நாட்டில் நிலவும் பல தடைகளைக் கடந்து உண்மை மாந்தனாக உயர்ந்து வாழும் வாழ்க்கையைச் சுத்த சன்மார்க்கம் உணர்த்துகிறது.*

*இது,சடங்குகளையும் மெய்ப்பொருளையும் கடந்து வாழ்கின்ற தூய நல்லொழுக்க வாழ்க்கையை வலியுறுத்துகிறது*

*வள்ளலார் அறிமுகப்படுத்திய தூயமெய்ந்நெறிக்கு உயிர்நாடியாகத் திகழ்வது உயிர்இரக்க (சீவகாருணிய)ஒழுக்கம். இது பற்றி,*

''நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு அவரெழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினாலல்லது வேறு வகையா லடைவதரிது.இவ்வன்புசீவகாருணியத்தாலல்லது வேறுவகையால்

வாராது. [1] என்று வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்.

*சத்திய தருமச்சாலை*

ஓர் உயிர் இன்னொரு உயிர்க்கு ஏற்படுகின்ற துன்பத்தை நீக்குதலே ஆதன்(ஆன்ம)உருக்கம். இத்தகைய ஆதன் உருக்கத்திற்கு வழியாகிய உயிர்இரக்க ஒழுக்கத்தைக் காட்சிப்படுத்தவே வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையை 23.5.1867 இல் வள்ளலார் நிறுவினார்.

வடலூரில் அவரால் நிறுவப்பட்ட சத்தியதருமச்சாலைஉயிர் இரக்கத்தின் அடிப்படையில் பசி தவிர்த்தலுக்காக ஏற்படுத்தப் பட்டது. எந்தவகையிலும் வழியில்லாத ஏழைகளுக்கு உண்டாகின்ற பசியென்ற தீயால் ஏற்படும் ஏதத்தை நீக்கும் உயிரிரக்க அருளகமே வடலூரில் உள்ள தருமச்சாலையாகும்.

வள்ளலார் தம் ஆதனியற் பயணத்தின் மூலம் கண்டு உணர்ந்து தெரிவித்ததே உயிரிரக்க ஒழுக்கம் அதன்வழிப் பிறர் துயர் நீக்குதற் பொருட்டு அவரின் உயிரிரக்கப் பட்டறிவின் வெளிப்பாடாக வடலூரில் இன்றும் தருமச்சாலை 145 ஆண்டுகளாகக் காட்சி தந்து பலரின் பசி தீர்த்து வருகிறது.

வள்ளலாரின் உயிரிரக்கஒழுக்கம் என்ற நூலை நெறிமுறையாகக் கொண்டு செயற்படுத்திவரும் செயற்கூடந் தான் அவரால் நிறுவப்பட்ட சத்திய தருமச்சாலை. இதை வள்ளலாரின் கொள்கை விளக்கநிலையம் என்று முனைவர் வை.இரத்தின சபாபதி அவர்கள் குறிப்பிடுகிறார் [2].

**சத்திய ஞானசபை**

எல்லாஉயிர்களையும் ஒன்றாகக் கருதி எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தியவர் வள்ளலார்.இவர் எல்லா உயிர்களிடத்தும் உயிருக்கு உயிராகக் கடவுள் இருக்கிறார் என்னும் இயற்கை உண்மையை எல்லார்க்கும் உணர்த்துதற்பொருட்டுச் சமரசசுத்த சன்மார்க்கச் சத்திய ஞானசபையை 1872இல் நிறுவினார். இயற்கை உண்மை,இயற்கைஅறிவு,இயற்கை இன்பம் செய்யும் பொருட்டு நிறுவப்பட்டதே சத்திய ஞானசபையாகும்.

**அருட்பெருஞ்சோதி வழிபாடு**

சத்தியஞானசபையில் அருட்பெருஞ்சோதியை அடுத்து கறுப்பு,நீலம் பச்சை,சிவப்பு பொன்மையான மஞ்சள் வெண்மைகலப்பு ஆக ஏழுதிரைகள் (சோதியை) ஒளியை மறைக்கின்றன. இந்த ஏழுதிரைகளும் காமம் சினம்லோபம் மதம்

மாச்சரியம்,கொலை,புலை நீக்கிய பின்தான் முழுமையான சோதியைக் காணமுடியும்.

திரை நீங்கியபின் முழுமையான ஒளி முழுமையான பேரொளியுடன் வெளிப்பட்டுக் காட்சி தருவதுபோல மாந்தனிடமுள்ள மாயைஆற்றல் என்னும் மறைப்பு நீங்கினால் தான் இயற்கை உண்மை விளக்கமாக விளங்கி உயிர்க்கு உயிராய் நிற்கும் உண்மைக் கடவுளாகிய அருட்பெருஞ்சோதி வெளிப் பட்டுப்புலப்படும் என்பதைத் தமது ஆதனியல் பட்டறிவின் மூலம் சத்திய ஞானசபையில் வள்ளலார் காட்சிப்படுத்தியுள்ளார்.

ஒவ்வொருவரிடமும் மறைந்துள்ள ஒளிக்கடவுளை (அருட்பெருஞ்சோதி ஆண்டவர்) அருட்பா முயற்சி,பயிற்சி வாயிலாய் கண்டு மகிழ்ச்சியும் அமைதியும் பெறலாம் என்று கூறுகிறார் பெருமான்.

உயிரிரக்க ஒழுக்கத்தின் வழி ஆதனன்பு ஒருமைப் பாட்டினை மாந்தர்கள் உணர்ந்து கொள்வதற்காக ஏற்படுத்தப் பட்ட ஆதனியல் காட்சியகமே சத்தியஞான சபையாகும்.

அருட்பெருஞ்சோதியை வள்ளலார் அடைந்திருப்பின் அவருக்குப் பெருங்களிப்பும் பேரின்பமும் கிடைத்தது போல உலக மக்கள் அனைவரும் இந்தப்பெருங்களிப்புப் பெற்றிட வேண்டும் என்கின்ற பேரவாவினாலேயே என்போல் இவ்வுலகம் பெருதல் வேண்டுவனே என்று வள்ளலார் கூறினார்.

**சித்திவளாகம்**

மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் சிறீமுகஆண்டு (1873) ஐப்பசிமாதம் ஏழாம்நாள் பகல் 8மணிக்குச் சுத்தசன்மார்க்கத்தின் முதற்கொடியைக் கட்டி வள்ளலார் பேருபதேசம் நிகழ்த்தினார். அருட்பேருபதேசத்தில் ஆண்டவர் முதற்கருவியாக

''அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி'' [3]

என்னும் பெருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண் டார் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகை கொடி கட்டிக்கொண்ட இடம்.பெருமந்திரம் பேருரை செய்தஇடம். பெருமந்திரம் கொடுத்த இடம். நிறைவாக வள்ளலார் சித்திவளாக அறையிலிருந்து விளக்கை அறைக்கு வெளியே வைத்து,

'இதைத் தடைபடாது வழிபடுங்கள்.இந்தக் கதவைச் சாத்திவிடப் போகிறேன். இனிக்கொஞ்ச காலம் எல்லோரும், ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகிறபடியால்

உங்களுடையகாலத்தை வீணிற் கழிக்காமல் ‘நினைந்து நினைந்து’ என்னும் தொடக்கமுடைய உஅ பாசுரமடங்கிய பாடலிற் கண்ட படி தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற் செய்யுங்கள். நானிப் போது இந்த உடம்பிலிருக்கிறேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்.[4]—என்று கூறியுள்ளார்.

சிறீமுக ஆண்டு 1873 கார்த்திகை மாதம் வள்ளலாரால் எடுத்து வைக்கப்பட்ட விளக்கு இன்றளவும் தடைபடாமல் வணங்கப்பட்டு வருகிறது. அவரால் ஏற்றப்பட்ட அணையாத் தீபம், தருமச்சாலை, சத்திய ஞானசபை, சித்திவளாகம் ஆகிய இடங்களில் தொடர்ந்து ஒளி வணக்கம் செய்து வருகிறார்கள். சிறீமுக ஆண்டு தைமாதம் 30.1.1874 19ஆம் நாள் வெள்ளிக் கிழமை முதல்நாள் முன்னிரவில் வள்ளலார் அங்கிருந்த அன்பர்களை யெல்லாம் அழைத்து,நான் உள்ளே பத்துப்பதினைந்து தினங்கள் இருக்கப் போகிறேன்.பார்த்து அவ நம்பிக்கை யடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது. வெறுவீடாகத்தானிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார்.[5] என்று கூறியுள்ளார்.

மேட்டுக்குப்பம் சித்திவளாகம் பற்றி மேட்டுக்குப்பத்தில் அடிகள் திருக்கரத்தால் அமைத்த விளக்கானது அருட்பெருஞ்சோதி ஆண்டவரைத் தாங்கி நிற்கும் அடிகளே என உணரவேண்டும். சன்மார்க்கச் சோதியாக வள்ளலார் நிற்க அச்சோதியுட் சோதியாக ஆண்டவர் நிற்கிறார்.வள்ளலார் என்ற சோதியின் மூலமாக அருட்பெருஞ்சோதியாம் ஆண்டவரை நாம் கண்டு தரிசிக்கிறோம். திருவிளக்கில் விளக்கொளியும் அதன் உள்ளொளியும் என்ற இருவகைச் சோதிகளின் இணைப்பை மனத்துட் கொண்டால் புறம் நின்ற சோதியாக வள்ளலாரையும் அகநின்ற அருட்பெருஞ் சோதியாக ஆண்டவரையும் நாம் காணமுடியும்.நமக்கு விளக்கிக் காட்டும் சந்நிதியாக அமைகிறார் வள்ளலார்.[6] என்று முனைவர் வை.இரத்தின சபாபதி அவர்கள் குறிப்பிடுவது நாம்மனத்திற் கொள்ளவேண்டிய செய்தியாகும்.

**தொகுப்புரை :**

வள்ளலார் ஒளிவடிவில் கடவுளை 50 ஆண்டுகள் 3 மாதம் 26 நாள்கள் ஆதனியப் பயணம் செய்தார். நிறைவாகக் கடவுள் ஒருவரே.அவர் ஒளிவடிவில் உள்ளார். அவர்தான் அருட்பெருஞ் சோதி ஆண்டவர் என்று எத்தரப்பு மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் உறுதியுடன் தெரிவித்தார். அருட்பெருஞ்சோதி ஆண் டவர் ஒருவரா (ஏக)னவர்.எங்கும் நிறைந்தவர்.எல்லாம் வல்லவர்,

எல்லாம் உடையவர்,முதலும் முடிவும் இல்லாதவர், தருமச் சாலையில் பசிப்பிணிக்கு மருந்தானவர். ஞானசபையில் சோதி யானவர். நம் எல்லோர் உள்ளத்திலும் தெய்வமானவர். வள்ளலார் கட்டிய ஞானசபையில் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் அருள் வழங்குகிறார் என்று உணர்ந்து கொள்ள முடிகிறது.

**குறிப்பெண் விளக்கம்**

1. இராமலிங்க அடிகள்,திருவருட்பா உபதேசப் பகுதி,பக்கம்-16
2. முனைவர் வை.இரத்தினசபாபதி,சிதம்பரம் இராமலிங்கரின் சித்திவளாகம் பக்கம்-139
3. இராமலிங்க அடிகள்,திருவருட்பா உபதேசப்பகுதி,பக்கம்-140
4. இராமலிங்க அடிகள்,திருவருட்பா திருமுகப்பகுதி,பக்கம்-110,111
5. இராமலிங்க அடிகள்,திருவருட்பா திருமுகப்பகுதி,பக்கம்-111
6. முனைவர் வை.இரத்தினசபாபதி,சிதம்பரம்இராமலிங்கரின் சித்திவளாகம் பக்கம்-142

---

# நூலகம்

வள்ளலாரின் தமிழ்மருத்துவம், முனைவர் ப.இராதா, விலை உரு.90.00

அறிவியல் அணுகு முறையோடு தமிழ் மருத்துவத்தை ஆராய்ந்துஎழுதியபயனுள்ள கட்டுரைகளின் தொகுப்பு. வள்ளலார் 485 மூலிகைகளைப்பற்றித்தம் உரை நடையில் கூறியுள்ளார். அவற்றுள் 52இன் பெயர்கள் அவற்றின் அறிவியல் பெயர்கள், அவற்றின் பயன்பாடு, பயன்படுத்தும் முறைகள் ஆகியவற்றை ஆசிரியர் தெளிவாக எழுதியுள்ளார்.

வள்ளலாரின் வாழ்வியற்கோட்பாடுகள், நோய்களும் வள்ள லார் கூறும் தீர்வுகளும்,வள்ளலாரும் இன்றைய அறிவியல்களும் போன்ற கட்டுரைகளும் சிறப்பாக ஆய்வுத்தன்மையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார்.

தமிழில் எழுதும் போது தமிழ்மரபைக் கடைப்பிடிக்க மறக்காமல் இருந்தால் நூல் மேலும் சிறப்படையும்.'அல்ட்ரா வயலட் கதிர்கள்' என்று எழுதுவது தவிர்க்கப் படவேண்டும். நூல் முழுவதும் இத்தகு தன்மை மிகுதியாகக் காணப் படுகிறது.

# நாட்டுப்புறப் பாடல்களில் உறவுப் பாடல்கள்

பா.உமாமகேசுவரி

முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழாய்வுத்துறை,
அரசினர் கலைக்கல்லூரி, அரியலூர்

''ஏட்டிலே எழுதவில்லை,எழுதிநான் படிக்கவில்லை
வாயிலே வந்தபடி வகையுடனே நான்படிப்பேன்''

என்பது நாட்டுப்புறப்பாடல்.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடு களையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். ஒருநாட்டின் வாழ்வையும் வரலாற்றினையும் குறையையும் நிறையையும்தெளிவாகக் காட்டு வன நாட்டுப்புற இலக்கியங்களே ஆகும்.

நாட்டுப்புறப் பாடல்களே நாட்டுப்புற இலக்கியத்தின் உயிர்நாடியாக அமைந்து உள்ளன.மக்கள் உணர்ந்து உணர்ந்ததைத் தங்களுக்குத் தெரிந்த சொற்களைப் போட்டு இட்டுக்கட்டி, இசைகூட்டிப் பாடும் உணர்ச்சி வெளிப்பாடே நாட்டுப் புறப் பாடல்கள். இந்நாட்டுப்புறப்பாடல்களில் இடம் பெறும் உறவுமுறை சார்ந்த பாடல்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

நாட்டுப்புறப் பாடல்களின் வாழ்க்கை முறையில் ஆணி வேராக அமைவது கூட்டுக் குடும்பங்களும் உறவு முறைகளுமே ஆகும். தாய்-தந்தை,தாய்-மகன்,அக்காள்-தம்பி, மாமன்-அத்தை, அண்ணி-கொழுந்தன்-நாத்தனார் என உறவு முறைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். அவ்வாறான உறவு முறைகளுக்குத் தாம் சொல்ல நினைக்கும் கருத்துக்களைத் தம்பாடல் வழி, இலைமறைகாய்போல் கூறுவதே நாட்டுப்புறப்பாடல் ஆகும். நாட்டுப்புற இயலின் பிரிக்க இயலாத சிறந்த கூறாக விளங்கும் நாட்டுப்புறப்பாடலில் பழமொழிகளும் வழக்காறுகளும்

அடங்கும். நாட்டுப்புறமக்களின் சிந்தனைச் சிதறல்களின் வெளிப் பாடாக அமையும். இந்நாட்டுப்புறப்பாடலில் உறவு முறைப் பாடல்களும் சிறந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது.

## தாய்குழந்தை உறவுமுறை

**தாலாட்டுப்பாடல்**

மாந்தன் தன் பிறப்பிற்குப் பொருளாய் அமைவது அம்மா வின் அரவணைப்பும் தாலாட்டுந்தான். பிறப்பினையும் தாலாட் டினையும் ஒட்டிப்பிற இரு உடன்பிறப்புகளாய்த்தான் பார்க்க வேண்டும். ஒரு குழந்தை தாயின் தாலாட்டு கேட்காது வளர்ந்த தாக வரலாறு இல்லை.

'காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பர்' [1]

என்று கைக்குழந்தை தாலாட்டுப்பாடலின் சுவையை அறியும் வண்ணம் பாரதியார் பாடுகிறார்.

தாயும் சேயும் என்ற உறவுப்பிணைப்பிலே பிறந்த இயற்கைக் கலைதான் தாலாட்டு [2] என்கிறார் தமிழண்ணல்.

தமிழ்ப்பாவலர்கள் தாலாட்டின் சிறப்பினைக் கூறியுள் ளமையை நினைவுகூர்ந்த இவ்வேளையில் நாட்டுப்புறப் பாடலில் தாலாட்டும் அதில் அம்மா-குழந்தை இடையேயான உறவுமுறைப் பாடல்கள் நல்லாமூர் முனைவர் கோ.பெரியண்ணன் அவர்கள் பாடல் தொகுப்புகளைக்காணலாம். இவர் களஆய்வில் ஏறக்குறை கால்நூற்றாண்டுக்காலம் முனைந்து செயற்பட்டு வருகிறார். இவர் பல்வேறு பகுதிகளில் களஆய்வின் வாயிலாகத் தொகுத்த மக்களால் பாடப்படும் நாட்டார் பாடல்களின் தொகுப்பு நூல்கள் ஏழினையும் வெளியிட்டுள்ளார். இத்தொகுப்புப் பாடலின் வழி இக்கட்டுரை அமைகிறது.

**தாய்பாடும் தாலாட்டு**

ஒருதாய் தனது தாலாட்டில் வறுமையைக் கூறுகிறாள். முத்துப்போன்ற அழகான சிரிப்பையும் முல்லைப்பூப் போன்ற அழகான பற்களையும்உடைய தங்கம் போன்ற மகனே, குடிசையில் பிறந்து ஈரத்தரையில் படுத்து உறங்கும் நீ, பணக்காரர் வீட்டில் பிறந்திருந்தால், இன்பமாய் வளர்ந்திருப்பாய் என்பதை,

முத்துச் சிரிப்பழகா முல்லைப்பூப் பல்லழகா
வைத்துக் குடிசையிலே விளையாட வந்தாயோ?
ஏழைக் குடிசையிலே ஈரத்தரை மேலே
தாழம்பாய் போட்டுத் தரையெல்லாம் மேடுபள்ளம்
தவழ்ந்தால் உறுத்தாதோ?

(நல்லாமூர் கோ.பெரியண்ணன்-நாடுபோற்றும் நாட்டுப் புறப் பாடல்கள்)

என்று தனது தாலாட்டில் தனது வறுமை நிலையையும் எதிர்காலம் பற்றிய கவலையையும் வெளிப்படுத்துகிறாள்.

**தாலாட்டில் முறைமகள் உறவுமுறைப்பாடல்**

தாயானவள் தனது மகனை ''ராசாபோல் பிறந்திருக்கும் மகனே உன்பெயர் அழகைக்கண்டு அத்தை தனது மகளுக்கு உன்னை மணமுடிக்கக் கேட்டாள்''என்று கூறித் தாலாட்டுகிறாள். இதனைப்,

''பனை பிடுங்கிப் பல்விளக்கிப் பார்போல நாமமிட்டால்
நாமத்தின் அழகு கண்டு நச்சுவாளாம் அத்தைமகள்''

எனும் பாடல் எடுத்துக்காட்டிச் சிறக்கிறது.

இப்பாடலில் முறைப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் முறையும் அத்தை-மாமன்,முறைமகள் ஆகிய உறவுமுறையை,உறவு இணைப்பை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளது எனலாம்.

**அம்மான் உறவு முறைப்பாடல்**

அத்தை மாமன் பாட்டி தாத்தா அக்கா சித்தி ஆகியஉறவினர் களை இயல்பாகத் தாயானவள் தனது தாலாட்டுப் பாட்டில் அறிமுகம் செய்து வைக்கிறாள்.மாமன் அடிப்பது மல்லிகைப் பூச்செண்டு,நோகாது. உனக்கு நெருங்கிய உறவினர் மாமன்தான் என்பதை உணர்த்துகிறாள். தாய் தனது தாலாட்டில்

ராராராரி ராராராரிரோ
யார் அடிச்சா சொல்லிஅழு
மாமன் அடித்தானோ மல்லிகைப் பூச்செண்டாலே
அத்தை அடிச்சாளோ அலரிப்பூச் செண்டாலே?
தாத்தா அடிச்சாரோ தாழம்பூச் செண்டாலே?
கண்ணான கண்மணியே யார்அடிச்சா சொல்லி அழு.

(கோ. பெரியண்ணன்-சிறுவர் பாடல்கள்)
என்ற பாடல் மூலம் தம்வீட்டு உறவுகளை எடுத்து இயம்புகிறார்.

**கணவன்-மனைவி உறவுமுறைப் பாடல்**

தகப்பன் எத்தொழில் செய்தாலும்,பெண் அத்தொழிலை உயர்வாகவே எண்ணிப்பாடுகிறாள்.தலைமை, ஒழுங்கு, ஞாயம் ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்குபவன் தான் தன்கணவன் என்பதைத் தன்மகன் அறியுமாறு கூறுகிறாள்.

மகனே உனது தந்தை வெள்ளை வேட்டிகட்டித் தொந்தி யுடன் நடந்து மிடுக்காகச் சென்றால் ஊரே அவரைப்பார்த்து வணங்கும். அனைவருக்கும் சமமாக முறை(நீதி)
வழங்குவார் என்றும் கூறுகிறார்.

தொந்தி குலுங்க தொடை குலுங்க
வேட்டி கட்டி
சபைக்கிசைந்த வார்த்தை சொல்லும்
சமர்த்தார் உங்களய்யா.
விழுந்த மரம் வேரூணி வெயிலுமுகம் காணாமல்
வந்த சனம் நோகாமல் வழக்குரைப்பார் உங்களய்யா
மலையும் மலையழகும் மலையைச் சுத்தித் தோப்பழகும்
மலைநடுங்க வழக்குரைக்கும் மாராசன் உங்களய்யா.

(கோ.பெரியண்ணன்-நாடுபோற்றும் நாட்டுப் புறப் பாடல்கள்)
என்று தாயானவள் தனது தாலாட்டில் தந்தையின் பெருமையைப் பறைசாற்றுகிறாள்.

**அண்ணன் உறவுமுறை**

தந்தைக்குப்பிறகு குடும்பத்தைக் கவனித்துக் கொள்பவன் அண்ணன். அன்பான சொற்கள் சொல்லி அனுப்பி வைக்கக் கூடியவன் அண்ணன். வறுமையால் தங்கை வாடும்பொழுது துயர்துடைக்கச் சீர்களைத் தருபவன். தங்கை துயர்அடையாமல் இருக்க அண்ணன் பாடுபடுவான் என்பதை ஒரு தங்கை தனது நாட்டார்பாடலில் பின்வருமாறு பாடுகிறாள்.

வங்கிக் கடிதாசி வாங்கி வரும் தபாலு வாங்கிவரிஎழுதி
நான்பொறந்த வாடகைக்குப் போட்டேனின்னா
வாடையில போற அண்ணா வாங்கிப் படிப்பியா-என்
வருத்தங்ளைத் தீர்ப்பியா?

கூடப்பிறந்தவன் கூட்டுப்பால் உண்டவன் எனப் பெருமையாகப் பேசக்கூடியவன் அண்ணன்.

‘அண்ணன் இருந்தால் அண்டா வரிசை வரும்
அண்ணன் இல்லாப் பாவி அழுது புலம்பரண்டி’

என ஒப்பாரிப்பாடலில் பாடுகின்றனர். அண்ணன் தன்தங்கையைப் ‘பெண்ணே’, ‘அடி’என்று அழைக்கக் கூடாது எனவும் ஒரு பாடல் தெரிவிக்கிறது.

**அண்ணி உறவுமுறை**

அண்ணனின்மனைவிஅண்ணி. அண்ணிக்கும்கணவன் தங்கைக்கும் அன்புறவு சில இடங்களில் மட்டும் உண்டு. நல்ல தங்காள் கதைப்பாடலில்,

‘‘ஆயிரம் தேங்காயிலே அழுதேங்காய் கைகொடுத்தாள்
பதினாயிரம் தேங்காயிலே பாழுந்தேங்காய் கைகொடுத்தாள்’’

என வருகிறது. ‘அன்பில்லா அண்ணனிடம் அஞ்சாது தண்ணீர் கேட்டேன்’ என்கிறாள் ஒரு பெண்.

‘‘பெரிய மடி கோலி பெருமல்லியைப் பறிச்சு வச்சேன்
பெரியண்ணன் பெண்டாட்டி பெரிய சொல்லு சொன்னான்னு
பெரியமடிஅவிழ்த்துப் பெருமல்லியைக் கொட்டி எறிஞ்சேன்’’

கோடி (புதுத்துணி)போட அண்ணன் இல்லையே என்பதை

‘‘அழைச்சிவந்து கோடி போட-நான்
அண்ணனில்லாப் பாவியானேன்’’

என்று பாடுகிறாள்.

**அக்காள்-தம்பி உறவுமுறை**

அக்காள்-தங்கை பாசம் சிறப்பாக இப்பகுதி மக்களால் போற்றப்படுகிறது.தான் இறந்து விட்டால்தங்கை கோரை மயிரவிழ்த்து என்மேல் விழுந்து அழுவாள் என்ற செய்தி பாடல் மூலம் தெரியவருகிறது.

**தாய்-மாமன் உறவுமுறை**

தாயின் தம்பியையோ அண்ணனையோ மாமன் என அழைப்பார்கள். சீரிடுவது மாமன். ‘‘தீரம் சொல்ல அம்மான் இல்லை’’ என ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது.

வரிசை வைக்க அம்மான் இல்லை என்றும் பாடுகின்றனர். தொட்டிலில் இடுகின்ற செயலைத்தாய்மாமனே செய்வான்.மாமன்

மடிமேலே மாலை போட்டு குந்தவைத்துக் காது குத்துகின்ற நிகழ்ச்சி நடைபெறும்.தன்தங்கை மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டுமாயின் முன்னின்று நடத்துபவன் தாய்மாமனே.

**அத்தை உறவுமுறை**

''தந்தையின் உடன்பிறந்த சகோதரியை அத்தை என அழைப்பார்கள். அத்தை அடித்தாளோ அரளிப்பூச் செண்டாலே'' என்று தாலாட்டுப் பாடுகிறாள் தாய்.

தன்கணவனுக்கு எவ்வளவு அரிசி போடவேண்டுமென்று கேட்கிறாள்.

''ஆதண்டங் கட்டை வெட்டி அவசரமா போற அத்த
யானை முடி ராசனுக்கு அரிசி எவ்வளவு போடட்டும்''

என்று ஒப்பாரிப் பாடலில் கூறுகிறாள் பெண். அத்தையைக் கிண்டல் செய்யும் பாடல்கள் பாடுகின்றனர்.

**பாட்டன் உறவுமுறை**

பாட்டனிடம் பேரக்குழந்தைகள் அன்புடன் நடந்து கொள்வார்கள்.பெயரன்,பெயர்த்திகளுக்கு அவர்களின் மனம் விரும்பும் கதைகளைச் சொல்லிக் கொடுப்பவர்தாத்தா எனச் செல்லமாக அழைக்கக்கூடியவர்.'சந்தனக் கட்டிலிலே சாய்ந்திருந்துசேதி சொன்னால் சாமி தளுகை வரும்-உனக்கு சங்கரனார் தீர்த்தம் வரும்'

**பாட்டி உறவுமுறை**

மகன் மகள் வயிற்றுக் குழந்தைகளாகிய பெயரன் பெயர்த்திக்கு வரவேண்டிய உதவிகளைச் செய்யக்கூடியவள்.

''பாட்டி அடித்தாளோ பால்வார்க்கும் கையாலே''

எனத் தாலாட்டுப்பாடலில் பாடித் தாலாட்டுகிறாள் தாய் பாட்டியைப் பெயர்த்திகள் கிண்டல் செய்து பாடல் பாடுவதும் உண்டு.

''பட்டணத்த பார்க்கப் போவோம் சின்னமாமா
இந்தப்பையன மறந்திடாதே சின்ன மாமா
பல்லுப் போன பாட்டிக்குத்தான் சின்னமாமா
பல்வரிசை வாங்கி வாங்கோ சின்ன மாமா'

என்று பாட்டியைக் கிண்டல் செய்து பாடல்களைப் பாடுகின்றனர். பெயரன் பெயர்த்திகளுக்கு நல்ல பாடல்களைச்

சொல்லிக் கொடுப்பவள் பாட்டியே.

**நாத்தனார்-நாற்றன்னார்**

கணவனின் தங்கையை நாத்தனார் என்று அழைப்பார்கள். அவர்கள் நாற்று அன்னார் என்று கூறி நாற்றுப் போன்றவர்கள் என்பர். அந்நாற்றைப்பிறந்த இடத்திலிருந்து பிரித்து வேற்ற கத்துக்கு அனுப்பி வைப்பது அவ்வீட்டுப் பெரியோர்கள் கடமை. புகுந்தவீட்டுப் பொருள்கள் அனைத்தும் தனக்கே சொந்தம் என நினைக்கும் அண்ணிக்கு அப்பொருள்கள் நாற்றன்னாருக்குச் சீர்களாகக் கொடுத்தனுப்பும் போது வெறுப்பு உண்டாகிறது. நாத்தனார் கொடுமையிலே இருந்து நான் வாழ மாட்டேன் என்கிறாள் ஒரு பெண்.

தான்பிறந்த வீட்டில் எந்தவகையான உரிமையும் எடுத்துக் கொள்ள மறுக்கிறாள் அண்ணி என வெறுப்படைந்து பேசுகின்ற நிலை காதல் பாடல்களில் காணப்படுகின்றது.

''வாசலிலே நெல்லி மரம்
வச்சபண்டம் காய்க்கும் மரம்
வந்தவள் திங்குறாளே-அம்மா
வளர்ந்த பொண்ணு ஏங்குறேனே அம்மா''

(கோ.பெரியண்ணன்-நாடுபோற்றும் நாட்டுப் புறப் பாடல்கள்ப.191)

**கொழுந்தனார் அண்ணி உறவுப்பாடல்கள்**

கணவன் தம்பியைக் கொழுந்தனார் என்று அழைப் பார்கள்.கொழுந்துஅன்னான் கொழுந்தன்.அண்ணி கொழுந்தனுக்கு மதிப்புக் கொடுத்ததாகப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

''பத்துக்கொத்து இட்டளியாம் ஏலேலம்பா ஏலம்
பாவக்கா சாம்பாராம் ஏலேலம்பா ஏலம்
பாத்துப் பரிமாறுங்கோ ஏலேலம்பா ஏலம்
படிச்ச கொழுந்தனுக்கு ஏலேலம்பா ஏலம்''

கொழுந்தன் என்பவன் தனக்குக் கிடைத்த உடைமையைப் பங்கு போடுபவன் எனப் போராட்ட உணர்வுப்பாடல்களும் காணக்கிடைக்கின்றன.

கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து எனக்கு அனைவரும் உதவிசெய்ய,நான் சாப்பிடவேண்டும் என்று ஒரு பெண் காதல்

பாடலில் பாடுகிறாள்.

''மாமனாரும் தண்ணி கொண்டு -மாமா
மாமியாரும் சோற பொங்கி
நாத்தனாரும் பரிமாற-மாமா
நானும் வந்து தின்ன வேணும்''

இதுகாறும் நாம் நாட்டார் பாடல்களில் இடம்பெற்றுள்ள உறவுமுறைகளை விளக்கமாகக் கண்டோம்.மாந்தர் வாழ்க்கைக்கு அடித்தளமாய் வாழையடி வாழையாக அமைந்த குலத்தினைத் தழைத்தோங்கச் செய்வதும் உறவுமுறைகள்தாம். அவற்றின் முதன்மையை இக்கட்டுரையில் அறிந்திருப்பீர் என நம்புகிறோம்.

---


## முனைவர் க.தமிழமல்லன் அவர்களின் புதிய நூல் 'பாச்சோலை'

(பாடல்தொகுப்பு) விலை உருவா 120.00
தேவைக்கு எழுதுக
வெல்லும் தூயதமிழ் புதுச்சேரி-605009

# வெல்லும்தூயதமிழ்

(நேர்மையான மாத இதழ்)

| | | |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | உரு | 140.00 |
| வாழ்நாள் கட்டணம் | | 1500.00 |
| புரவலர் கட்டணம் | | 3500.00 |

மின்அஞ்சல் : vtthamizh@gmail.com
வலைப்பதிவுhttp//:vellumthuyathamizh.blogspot.in
வலைப் பதிவில் உறுதுணை : பேராசிரியர் அ.பசுபதி
இதழ்ப்பணிகளில் உறுதுணை:புதுவையுகபாரதி,இன்பவேல்
பேசி: 043-224 70 72 செல்பேசி : 97 91 62 99 79

## இலக்கியச் சாலை

*30.3.2013 புதுவைத்தமிழ்ச்சங்கம் 52ஆம் ஆண்டுவிழா அதன்தலைவர் வி.முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் மு.பாலசுப்பிரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார். கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.போட்டிகளில் பங்கேற்றவர்களுக்கு அமைச்சர் தி.தியாகராசன் பரிசுகள் வழங்கினார். கலைமாமணி வேங்கடேசன் தலைமையில் நடைபெற்ற பாட்டரங்கில் சு.வேல்முருகன், கல்லா டன், முனைவர் க.தமிழமல்லன், வில்லியனூர் பழனி, இலட்சுமி தத்தை, ஆகியோர் கலந்து கொண்டனர்.பெரியார் தாசன் சிறப்புரை நிகழ்த்தினார்.*

*13.4.2013*

*15.4.2013 கோடைப் பாவரங்கம்ஒன்றை முனைவர் க.தமிழமல்லன் தலைமையில்புதுவைத் தொலைக்காட்சி நடத்தியது.புதுவையுகபாரதி, சோ.கு.செந்தில் குமரன், சச்சிதா னந்தன், மகாலட்சுமி ஆகியோர் அதில் கலந்துகொண்டு நிலம்நீர்காற்றுநெருப்புவானம் ஆகிய ஐம் பூதங்களைப் பற்றிப்பாடல்கள் வழங்கினர்.*

## வெல்லும் தூயதமிழ்ப் புரவலர்கள்

★**பெங்களூர்**

கு.பூங்காவனம்
வி.சி.வேலாயுதம்
வீ.இரத்தினம்
சி.பூ.மணி
கோ.இரத்தினவேல்,நெய்வேலி
உலோ. பசுபதி கரிகாலன் ”

★**சென்னை**

தெக்கூர்த் தமிழ்த்தென்றல்
மா.ப.கிருட்டினன்
வ.வேம்பையன்
ஆ.தமிழ்ச்சுடர்
**தென்னிலை** கோவிந்தன்
**பழனி** மகிழ்நன்
**தரங்கைப்** பன்னீர்ச்செல்வன்
மருத்துவர் மறையரசன்
**சிங்கப்பூர்**கோவலங்கண்ணனார்
கோவை இராமராசு

★**புதுச்சேரி**

முதுகண்ணன்
செவ்வேள்
பெ.பராங்குசம்
ப.மங்கையர்க்கரசி
திருவேங்கடம்
செ.செயபால்
இரத்தின.சின்னசாமி
அன்புநிலவன்
சு.பொ.கதர்அண்ணாமலை
மு.இராமசாமி
தமிழியக்கன்
ஆணையர் த.தியாகராசன்



பாச்சோலை நூல்வெளியீடு

## மருத்துவம் : சிறுநீரகம் நலமாக



**பாதத்தின் 4ஆம் விரலில்** சிறுநீரக நரம்புத் தொடர்கள் முடிகின்றன. அமைதியான இடத்தில் அமர்ந்து முழுமனத்துடன் நாள்தோறும் சிறிது நேரம் சுற்றிச் சுற்றி அமுக்கிவிட வேண்டும்.இப்படிச் செய்தால் சிறுநீரகம் புத்துணர்வு அடையும்.செய்து பாருங்கள்.

### சிறுநீரக நலம்

இதற்குரிய உணவு முறையைக் கடைப்பிடித்தால் பயன்கிடைக்கும்.

1.உணவில் அரை உப்பு மட்டும் போதும்
2.மிளகு, எலுமிச்சைச் சாறு மிகவும் பயன்படுவன. உப்புக்கு மாற்றாக இவை உதவும்.
3.ஓமம் உதவும்.உணவுடன் ஓம இலைகளைச் சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.
4.இந்தோனேசிய மக்களுக்குச் சிறுநீரகத் தொல்லைகள் அதிகமாக ஏற்படு வதில்லை. அவர்கள் புளியை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வதுதான் கரணியமாம்.
5.தவிர்க்க வேண்டிய உணவுகள்
*புளிச்சக் கீரை *தக்காளி *சர்க்கரை வள்ளிக்கிழங்கு *நீர்ப்பூசணி
* நல்லெண்ணெய் *ஒலிவஎண்ணெய்